செயற்பொறியாளர் அலுவலகம், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம்,
திருவள்ளூர் அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: பொறி.பி.ஸ்ரீதர், பி.இ.,
செயற்பொறியாளர், பொபது.,

செ.மு.ஆ.எண்.நிஎ1/308/2020 நாள். 26.08.2021

பொருள் : பணியமைப்பு – பொபது – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – கருணை அடிப்படையில் பணி நியமனம் –திரு.தெ.யுவராஜ் (த/பெ.சி.தெய்வசிகாமணி (லேட்)) இளநிலை உதவியாளர் பணி நியமனம் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது – தகுதிகாண் பருவம் துவங்கி – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (3ப) எண்.12, பொதுப்பணி (பி1) துறை நாள்.19.05.2021.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சென்னை–5, அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ். 3(4) / 32829 / 2019 நாள்.22.02.2020.
3. முதன்மை தலைமைப் பொறியாளர், (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை மண்டலம், சென்னை–5 அவர்களின் செ.மு.ஆ.எண்.நி3(3)/3283/2020 நாள்.28.02.2020.
4. கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செ.மு.ஆ.எண். நி2 / 939 / 2020 நாள்.03.03.2020.
5. இக்கோட்ட க.எண்.நிஎ1/கோ–தனி/2020 நாள்.07.09.2020.

*****

பார்வை 2–ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, பொதுப்பணித் துறையைச் சார்ந்த, வெள்ளாறு வடிநில உபகோட்டம், விருத்தாசலம் அலுவலகத்தில் பாசன உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.சி.தெய்வசிகாமணி அவர்கள் கடந்த 29.07.2017 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரான அவரது மகன் திரு.தெ.யுவராஜ் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் இக்கோட்ட அலுவலகத்தில் 12.03.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிமேற்கொண்டு பணிபுரிந்து வருகிறார்.

அதனைத் தொடர்ந்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கு தேவையான அசல் சான்றிதழ்கள் மற்றும் சான்றாவணங்கள் உரிய வழிமுறையாக அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 12.03.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்க பார்வை 5-ல் காணும் இக்கோட்ட கடிதம் வாயிலாக முதன்மை தலைமைப் பொறியாளர், (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம், பொபது, சென்னை அவர்களின் மூலம் கோரப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 1-ல் காணும் அரசாணையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 12.03.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது.

மேற்காணும், ஆணையினைத் தொடர்ந்து, திரு.தெ.யுவராஜ், இளநிலை உதவியாளர் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 2016)-இல் உள்ள பிரிவு 28(1)ன்படி தமிழ்நாடு அரசு பணிகளின் கீழ் இவர் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 12.03.2020 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் துவங்கியதாக ஆணை வழங்கப்படுகிறது.

தனியர் தகுதிகாண் பருவத்தினை 12.03.2020 முற்பகல் தொடங்கி, இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும்.

மேலும், தனியர் தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவித்து ஆணையிடப்படுகிறது.

26/8/2021

செயற்பொறியாளர், பொபது.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு)
கோட்டம், திருவள்ளூர்.

மா.நா 26/08/2021

பெறுநர்
திரு.தெ.யுவராஜ், இளநிலை உதவியாளர்
கோட்ட அலுவலகம்.

**நகல் :** கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**நகல் :** கோப்புக்கு

ஐயா,

பணிப்பதிவேட்டில் பதியப்பட்டது

26/8/21

செ.பொ.

மா.நா 26/08/21